

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

பிப்ரவரி
2005

ஆசிரியர்
B.அர்ஜூனன்

மரம் 5 கனி 3

## சென்னை மாவட்டத்தில் நடைபெற்ற பதினேழாவது கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்



## கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றிருக்கிறோம்---
## In Christ We Hawe...



ஒரு வாழ்வு அது ஒருபோதும் மரிக்காதது;
ஒரு அன்பு அது ஆழம் அறியமுடியாதது;
ஒரு மகிமை அது ஒருபோதும் மந்தாரமடையாதது;
ஒரு அழகு அது ஒருபோதும் பழுதடையாதது;
ஒரு ஒளி அது ஒருபோதும் இருளடையாதது;
ஒரு பரிசுத்தம் அது ஒருபோதும் அசுத்தமடையாதது;
ஒரு மகிழ்ச்சி அது ஒருபோதும் குறையாதது;
ஒரு சமாதானம் அது ஒருபோதும் புரிந்து கொள்ளக்கூடாதது;
ஒரு நம்பிக்கை அது ஒருபோதும் ஏமாற்றமடையாதது;
ஒரு வலிமை அது ஒருபோதும் பலவீனமடையாதது;
ஒரு சந்தோஷம் நிறைந்தது அது ஒருபோதும் தடையில்லாதது;
ஒரு நேர்மை அது ஒருபோதும் களங்கமில்லாதது;
திரவ சம்பத்துக்கள் அது ஒருபோதும் செலவழியாதது

**கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் (ரோமர்16:16)**

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
# THE WORD OF CHRIST
**புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்**

*மரம் - 5* *பிப்ரவரி - 2005* *கனி - 3*


ஆசிரியருரை

## வேதவாக்கியங்களை அறியாமல் தப்பான எண்ணம் கொள்ளுகிறீர்கள்

## Ye do err, not knowing the scriptures



வேதவாக்கியங்களை அறியாமல் தப்பான எண்ணம் கொள்ளுகிறவர்களை நாம் அநுதினமும் சந்திக்கிறோம். பரிசுத்த வேதாகமத்தில் உள்ள புதிய ஏற்பாட்டில் சதுசேயர்களைப்பற்றி வாசிக்கின்றோம். இவர்கள் உயிர்த்தெழுதலும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்று சாதிக்கிறவர்கள் (அப்.23:8). இவர்கள் இயேசுவை சந்தித்து, "போதகரே, ஒருவன் சந்தானம் இல்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்க வேண்டும் என்று மோசே சொன்னாரே. எங்களுக்குக்குள்ளே சகோதரர் ஏழுபேர் இருந்தார்கள்; மூத்தவன் விவாகம் பண்ணி, மரித்து, சந்தானமில்லாததினால் தன் மனைவியைத் தன் சகோதரனுக்கு விட்டுவிட்டுப்போனான் அப்படியே இரண்டாம் மூன்றாம் சகோதரன்முதல் ஏழாம் சகோதரன் வரைக்கும் செய்தார்கள். எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள். ஆகையால், உயிர்த்தெழுதலில் அவ்வேழுபேரில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்? அவர்கள் எல்லாரும் அவளை விவாகம் பண்ணியிருந்தார்களே என்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள். உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை; அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல் இருப்பார்கள்" *(மத்.22:24-30)*

என்றார். வேதவாக்கியங்களை சரிவர புரிந்துகொள்ளாதவர்கள் இந்த சதுசேயர்களைப்போலவே இருக்கிறார்கள்.

சதுசேயர்களுடைய வாயை அடைத்தார் என்று பரிசேயர் அந்த சமயத்தில் கேள்விப்பட்டு, அவரிடத்தில் கூடிவந்தார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: "கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே, தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார். அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாதிருந்தது. அன்று முதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை" (மத்.22:42-46). சதுசேயர், பரிசேயர் ஆகிய இவ்விரண்டு கூட்டத்தாருமே வேதவாக்கியங்களை அறியாமல் தப்பான எண்ணங்கொண்டிருந்தனர். இவர்களைப் போல இன்று அநேக பெயர் கிறிஸ்தவர்கள் பிரிந்து கொண்டு ஒருவரையொருவர் சாடிவருகின்றனர். சதுசேயர்கள் வாயைஅடைத்தார் என்று பரிசேயர் சந்தோஷப்பட்டார்கள். பரிசேயர்களைப் பார்த்து இயேசு கேட்ட கேள்விக்கு பதில் சொல்லமாட்டாது திணறினார்கள். அதற்கு பின்பு கேள்விகேட்பதையே விட்டுவிட்டனர். இன்று இயேசுவைக் குறித்து பிரசங்கிக்கிறவர்கள் இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிடுகிறார்கள் ஆனால் அவர்கள் மரியாளை இயேசுவின் தாய் என்றும் மரியாள் மூலமே ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும் என்றும் போதித்து மரியாளை ஒரு கடவுளாக மாற்றிவிட்டனர். இப்படி வேதவாக்கியங்களை அறியாமல் தவறான எண்ணம் கொண்டு கோடிக்கணக்கான ஜனங்கள் கிறிஸ்துவின் கிருபையிலிருந்து வழிவிலகிப் போய்க்கொண்டிருக்கின்றனர்.

பரிசேயர்கள் ஒரு முறை ஆண்டவரிடத்தில் வந்து: "நீர் இவ்விடத்தை விட்டுப்போய்விடும்; ஏரோது உம்மைக்கொலைசெய்ய மனதாய் இருக்கிறான் என்றார்கள். அதற்கு அவர் நான் இன்றைக்கும் நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளில் நிறைவடைவேன். இன்றைக்கும் நாளைக்கும் மறுநாளைக்கும் நடமாட வேண்டும்; எருசலேமுக்குப்புறம்பே ஒரு தீர்க்கதரிசியும் மடிந்து போகிறதில்லையென்று நான் சொன்னதாக நீங்கள் போய் அந்த நரிக்குச் சொல்லுங்கள்" என்றார் (லூக்.13:31-33). கர்த்தர் மரணத்தைக் குறித்து

பயப்படவில்லை அதை நிறைவேற்றவே வந்தார். ஆனால் பரிசேயர்களோ வேதத்தை அறியாததினால் தப்பான எண்ணம் கொண்டு கர்த்தருக்கே ஆலோசனை சொன்னார்கள். அதற்கு கர்த்தருடைய பதில் வல்லமையுள்ளதாக இருந்தது எருசலேமுக்கு புறம்பே ஒரு தீர்க்கதரிசியும் மடிந்து போகிறதில்லையென்று நான் சொன்னதாக நீங்கள் போய் அந்த நரிக்குச் சொல்லுங்கள் என்றார். அவரோடு பாடுபடுகிறவர்கள் நிச்சயமாக சோர்ந்துபோகார்கள். "ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது" (பிலி.1:29) என்ற வசனத்தை நினைவு கூறுவார்கள்.

இயேசு ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் நோக்கி: "வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்: ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில் அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள். சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள். தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள்" (மத்.23:2-4). இவர்களைப்போல கிறிஸ்தவம் என்ற போர்வையை போர்த்திக்கொண்டு ஜனங்கள் மத்தியில் இருக்கிறவர்களை நீங்கள் நன்கு அறிவீர்கள். அவர்களுடைய செய்கையின் படி செய்யாதிருங்கள். ஏனென்றால் அவர்கள் ஒருவனை அவர்களுடைய மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறார்கள். அவன் அவர்களுடைய மார்க்கத்தானானபோது அவனை அவர்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறார்கள் இதுவே அவர்களுடைய பாரம்பரிய பழக்க வழக்கமாயிருக்கிறது. இப்படிப்பட்ட சமுதாயத்தோடு உங்களுக்கு உறவு அவசியமா?

***சீஷர்களைக் குற்றப்படுத்தல்:***

இயேசுவை குற்றப்படுத்தின பரிசேயர்கள் அவருடைய சீஷர்களையும் குற்றப்படுத்த தொடங்கி, "இதோ, ஓய்வுநாளில் செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களே என்றார்கள். அதற்கு அவர்: தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்தபோது செய்ததை நீங்கள் வாசிக்க வில்லையா? அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர்தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவசமூகத்து அப்பங்களைத் தானும் தன்னோடிருந்தவர்களும் புசித்தார்களே. அன்றியும், ஓய்வுநாட்களில் ஆசாரியர்கள் தேவாலத்தில் ஓய்ந்திராமல், ஓய்வுநாளை வேலை நாளாக்கினாலும், குற்றமில்லாதிருக்கிறார்கள் என்று நீங்கள்

வேதத்தில் வாசிக்கவில்லையா? தேவாலயத்திலும் பெரியவர்இங்கே இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று அறிந்தீர்களானால், குற்றமில்லாதவர்களை நீங்கள் குற்றப்படுத்த மாட்டீர்கள் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார்" (மத்.12:2-8) என்றார். கர்த்தர் இவர்களைப் பார்த்து நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா?என்று இரண்டு முறை கேட்கிறார். ஆம் வேதத்தை வாசிக்காதவர்களும் அதன் அர்த்தத்தை புரிந்துகொள்ளாதவர்களும் எப்பொழுதும் குற்றப்படுத்திக்கொண்டே இருப்பார்கள்.

மேலும் கைகழுவாமல் போஜனம் பண்ணினதைக் குற்றப்படுத்தினார்கள். "உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? கைகழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே! என்றார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்?..... உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள். மாயக்காரரே, உங்களைக்குறித்து: இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ, எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் என்க்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்" (மத்15:2-9). இந்த வேதபாரகர் பரிசேயர்களைப்போல பாரம்பரியங்களைக் கைக்கொள்ளுகிறவர்களின் கூட்டம் பெருகிக்கொண்டே செல்கிறது. இவர்களுடைய ஆராதனை வீணானதாகவும், இவர்களுடைய இருதயமோ கர்த்தருக்கு தூரமாகவும் விலகியிருக்கிறது. கர்த்தருடைய போதனையோ "வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்" (மத்.15:11).

**சீஷர்களின் அறியாமை:**

பாரம்பரியத்தினால் தேவனுடைய கற்பனையை அவமாக்கிவரும் பாரிசேயர் வேதபாரகர்களை கர்த்தர் சாடும்போது இடறலடைந்தார்கள். இதைப்பார்த்த சீஷர்கள் ஆண்டவரிடத்தில் வந்து: "பரிசேயர் இந்த வசனத்தைக் கேட்டு இடறலடைந்தார்கள் என்று அறிவீரா என்றார்கள். அவர் பிரதியுத்தரமாக: என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும் என்றார்" (மத்.15:12,13). பின்பு "பேதுரு அவரை நோக்கி: இந்த உவமையை எங்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றான். அதற்கு இயேசு: நீங்களும் இன்னும் உணர்வில்லாதவர்களாயிருக்கிறீர்களா? வாய்க்குள்ளே

போகிறதெல்லாம் வயிற்றில் சென்று ஆசனவழியாய்க் கழிந்துபோம் என்பதை நீங்கள் இன்னும் அறியவில்லையா? வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்...... கைகழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது என்றார்" (மத்.15:15-20).

சீஷர்கள் ஒரு முறை அப்பங்களை கொண்டுவர மறந்துபோனார்கள். அவ்வேளையில் "இயேசு அவர்களை நோக்கி: பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றார். நாம் அப்பங்களைக் கொண்டுவராதபடியால் இப்படிச் சொல்லுகிறார் என்று அவர்கள் தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டார்கள். இயேசு அதை அறிந்து: அற்பவிசுவாசிகளே, அப்பங்களைக் கொண்டுவராததைக் குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே யோசனை பண்ணுகிறதென்ன? இன்னும் நீங்கள் உணரவில்லையா? ஐந்து அப்பங்களை ஐயாயிரம்பேருக்குப் பகிர்ந்ததையும், மீதியானதை எத்தனை கூடைநிறைய எடுத்தீர்கள் என்பதையும்; ஏழு அப்பங்களை நாலாயிரம்பேருக்கு பகிர்ந்ததையும், மீதியானதை எத்தனை கூடைநிறைய எடுத்தீர்கள் என்பதையும் நீங்கள் நினைவுகூராமலிருக்கிறீர்களா? பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவுக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று நான் சொன்னது அப்பத்தைக் குறித்துச் சொல்லவில்லை என்று நீங்கள் உணராதிருக்கிறது எப்படி என்றார் அப்பொழுது, அவர் அப்பத்தின் புளித்தமாவைக்குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று சொல்லாமல், பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் உபதேசத்தைக்குறித்தே அப்படிச் சொன்னார் என்று அறிந்து கொண்டார்கள்" (மத்.16:6-12). உடனிருந்த சீஷர்களே இப்படி சரிவர புரிந்து கொள்ளாத போது ஒரு சில முறை வசனத்தை எடுத்துப்போதிக்கும் பட்ஷத்தில் விசுவாசிகள் எப்படி புரிந்து கொள்வார்கள் என்ற கேள்வி எழும்புகிறது?

ஆகையால் பிரியமானவர்களே கர்த்தர் சொன்ன வசனத்தை இங்கு நினைவுக்கு கொண்டுவருவோம் " வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" (யோவா.5:39). ஆக வேத ஆராய்ச்சி மிக முக்கியமானது.

மேலும் சீஷர்களின் அறியாமையைக் குறித்து படிக்கும்போது "மனுஷகுமாரன் மனுஷர்கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றும், அவர்கள் அவரைக் கொன்றுபோடுவார்கள் என்றும், கொல்லப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் என்றும் அவர் தம்முடைய சீஷர்களுக்குப் போதகம் பண்ணிச் சொல்லியிருந்தார். அவர்களோ அந்த

வார்த்தையை அறிந்து கொள்ளவில்லை. அதைக்குறித்து அவரிடத்தில் கேட்கவும் பயந்தார்கள். அவர் கப்பர்நகூமுக்கு வந்து, வீட்டிலே இருக்கும்போது, அவர்களை நோக்கி: நீங்கள் வழியிலே எதைக்குறித்து உங்களுக்குள்ளே தர்க்கம் பண்ணினீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் பேசாமல் இருந்தார்கள்; ஏனெனில் அவர்கள் தங்களுக்குள்ளே எவன் பெரியவன் என்று வழியில் தர்க்கம்பண்ணினார்கள். அப்பொழுது அவர் உட்கார்ந்து, பன்னிருவரையும் அழைத்து; எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் கடையானவனும், எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக் கடவன்... என்றார்" (மாற்9:31-35). இந்த சீஷர்களைப்போல வசனத்தை சரிவர அறிந்து கொள்ளாமல் பெரிய ஆளாக மாறவே அநேகருக்கு விருப்பம்.

பேதுரு ஒரு முறை இயேசுவை கடிந்து கொண்டான். "இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்து கொள்ளத்தொடங்கினான். அவரோ திரும்பிப் பேதுருவைப்பார்த்து; எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்" (மத்16:22,23). யாக்கோபும் யோவானும் எருசலேம் நகரத்தார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்று அறிந்து, எலியா செய்ததுபோல வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச்சித்தமா என்று கேட்டார்கள். **"அவர் திரும்பிப்பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார்" (லூக்.9:55,56).**

கர்த்தருடைய சித்தத்தையும், வேதவாக்கியங்களையும் அறியாமல் தப்பான எண்ணங்கொண்ட வேதபாரகர், பரிசேயர், சதுசேயர்களைப் போல இன்றும் அநேகர் வாழ்ந்து கொண்டுள்ளனர். உங்களுடைய எண்ணம் எப்படிப்பட்டதாக இருக்கிறது. இயேசுவுடன் இருந்த சீஷர்கள் சிலவேளைகளில் புரியாது இருந்தார்கள் அப்படியே நீங்களும் இருக்கிறீர்களா? ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்தி கற்றுக்கொள்ளுங்கள். கர்த்தர் அதற்குரிய ஞானத்தை உங்களுக்கு தந்தருள்வாராக!

**"என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்"**

# யாரை நோக்கி நாம் ஜெபிக்க வேண்டும்?
# To whom should we pray?

J.C.Choate



**நா**ம் கிறிஸ்தவர்கள், தேவனுடைய பிள்ளைகள், கர்த்தருடைய சபையாகிய அவருடைய குடும்பத்தின் அங்கத்தினர்கள், அவருடைய பிரசன்னத்திற்குள் வரக்கூடிய சிலாக்கியம் பெற்று ஆசீர்வதிக்கப் பட்டவர்கள். தேவன் நம்மோடு தம்முடைய வார்த்தையின் மூலம் பேசுகிறார், மேலும் நாம் ஜெபத்தின் மூலம் அவரோடு பேசுவதற்குத் தகுதியுடையவர்கள். நாம் அவரை துதிக்கவும், கனப்படுத்தவும் அங்கிகரிக்கப்பட்டவர்கள். அவர் செய்த சகலவற்றிற்காகவும், மேலும் தொடர்ந்து நமக்காகச் செய்கிறவற்றிற்காகவும் நம்முடைய நன்றிகளை செலுத்தக் கூடியவர்கள், மேலும் நம்முடைய விண்ணப்பங்கள் அனைத்தும் ஜெபத்தின் மூலமாக அவருக்குத் தெரிந்திருக்கக்கடவது.

நம்முடைய தேவன் மரித்தவர் அல்ல, ஆனால் அவர் ஜீவிக்கிறவர் மேலும் எப்போதும் நம்முடைய ஜெபத்தைக் கேட்கிறவராகவும் நாம் அவருடைய சித்தத்தின்படி ஜெபிப்போமானால் நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்கிறவராகவுமிருக்கிறார் (1யோவா.5:14,15). ஏனென்றால் அவர் நம்மை உருவாக்கினார், நம்மை அவர் அறிகிறார் மேலும் நம்முடைய தேவவைகளை அவர் அறிகிறார். ஆகையால் நாம் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம் (மாற்.16:16; அப்.2:38,47), அவர் நம்முடைய பிதாவாயிருக்கிறார். நாம் அவருடைய பிள்ளைகளா யிருக்கிறோம். அவருடைய குடும்ப அங்கத்தினராயிருக்கின்றபடியினால், அவரோடு கூட நாம் மிகவும் விசேஷித்த உறவினைக் கொண்டிருக்கிறோம். அவர் நம்மை நேசிக்கிறார் நாம் அவரை நேசிக்கிறோம், ஆனபடியினால் அவர் எப்போதும் நம்மைக் குறித்து அக்கறையுடனிருக்கிறார்.மேலும் நாம் ஜெபிக்கும் போது நமக்குச் செவிகொடுத்து நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்க விரும்புகிறார்.

தேவன் என்றென்றும் ஆவியாயிருக்கிறார் (யோவா.4:24). நாம் சந்திரனுக்கு, நட்சத்திரங்களுக்கு, மற்றும் இயற்கைக்கு அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட பொருள்களுக்கு, அல்லது மதத்தலைவர்கள் என்ற உருவிலிருக்கிற மனிதருக்கு மற்றும் பரிசுத்த மனிதர்கள் என அழைக்கப்பட்டவர்களுக்குத் தலைகுனியக் கூடாது. இப்பேர்ப்பட்ட பொருட்கள் அல்லது மனிதர்கள் நம்மை இரட்சிக்க முடியாது. மேலும்

அவர்கள் நம்முடைய ஜெபங்களுக்குச் செவிசாய்த்து பதிலளிக்க முடியாது.

நாம் ஒரே தேவனும் ஒரே கர்த்தரும் உண்டென்று அறிந்திருக்கிறோம். தேவனுடைய பிள்ளைகளுக்கு பிதாவாக ஒரே தேவனும் அவருடைய குமாரனாகிய இயேசு ஒரே கர்த்தராகவுமிருக்கிறார் (எபே.4:1-6). ஆனபடியினால் இயேசு தேவனுடைய குமாரனும் ஒரே கர்த்தருமாயிருக்கிறார், அவர் நம்முடைய மத்தியஸ்தர், பரிந்து பேசுகிறவர் மேலும் நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. அவ்வாறாக , இயேசுவின் மூலம் நம்முடைய பிதாவாகிய தேவனிடத்திற்குச் செல்லும் வழியைப் பெற்றிருக்கிறோம், ஆனபடியினால் நம்முடைய எல்லா ஜெபங்களும் இயேசுவின் மூலமே தேவனிடத்திற்கு ஏறெடுக்கப் படவேண்டியிருக்கிறது. அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு இவ்வாறாக எழுதினான்,"என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார். அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்" (யோவா.2:1-3). மறுபடியும் எபிரேய எழுத்தாளன், "இவரோ (இயேசுவோ), விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன் படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தரா யிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்" (எபி.8:6) என்றான். இந்த எழுத்தாளன் கிறிஸ்துவே புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார் (எபி.9:15) எனவும், தேவனோடுள்ள நம்முடைய ஐக்கியத்திற்குள் நம்மை வழிநடத்துகிற உடன்படிக்கை இதுவே எனவும் தொடர்ந்து கூறுகிறான்.

யாரை நோக்கி நாம் ஜெபிக்க வேண்டும்? என்ற நம்முடைய ஆரம்ப கேள்விக்குத் திரும்புகையில், கிறிஸ்தவர்கள் பிதாவாகிய தேவனை நோக்கி அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலம் ஜெபிக்கவேண்டு மென்பதே இதனுடைய பதிலாயிருக்கும். மற்ற யாரோ ஒருவரை நோக்கி ஜெபிப்பது பரிகாசத்துக்குரியதாகவும் நேரத்தை வீணடிப்பதாகவுமிருக்கும். கிறிஸ்துவின் மூலம் ஏறெடுக்கப்படாத ஜெபங்கள் கேட்கப்படாதவை களாயிருக்கும், ஏனென்றால் இயேசு கிறிஸ்துவையல்லாத வேறே மத்தியஸ்தர் நமக்கும் பிதாவுக்குமிடையே இல்லை. நம்முடைய ஜெபங்கள் கேட்கப்பட்டு பதிலளிக்கப்பட நாம் எதிர்பார்ப்போமானால், நாம் கட்டாயம் பிதாவின் சித்தப்படியே ஜெபிக்கவேண்டும்.

# கர்த்தர் வருகிறார்

## Maranatha

J.Glory Arjunan

கர்த்தர் வருகிறார் என்ற செய்தி உங்களுக்குக் களிப்பை உண்டாக்குகிறதா? அல்லது கலக்கத்தை உண்டாக்குகிறதா? எதுவாயிருந்தாலும் கர்த்தர் வருகிறார் என்பது நிச்சயம். ஆம் அவர் சீக்கிரமாய் வருகிறார் என வேதம் கூறுகிறது. "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்...."(1தீமோ.1:15). இவ்வாறாக பூமிக்கு வந்த கிறிஸ்து இயேசு நம்மை பாவத்திலிருந்து விடுவித்து காக்கும்படிக்கு சிலுவையிலே தம்முடைய இரத்தத்தை சிந்தி மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த கிறிஸ்து தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அப்போஸ்தலருக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார் (அப்.1:3). மட்டுமல்ல "... அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயரஎடுத்துக் கொள்ளப்பட்டார், ... வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று: ......உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (அப்.1:9-11).

அன்பு சகோதரிகளே, இதைக்குறித்து இன்று அநேகர் பரியாசம் பண்ணுகின்றனர். சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள். "பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்ததைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:8,9).

ஆம், நம்மை உண்டாக்கின நம்முடைய தேவன் நம்மை அதிகமாய் நேசிக்கிறார். நம்மைக் காக்கும்படிக்கு, வரவிருக்கும் அழிவிலிருந்து விடுவிக்கும்படிக்கு சித்தமுள்ளவராயிருக்கிறார். எனவே தான் இங்கு "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" என ஆவியானவர் திருவுளம் பற்றுகிறார். நாம் கெட்டுப்போகாமலிருக்க வேண்டுமானால் மனந்திரும்ப வேண்டியது மிகவும் அவசியம். அன்பு சகோதரியே, நீங்கள் மனந்திரும்பிவிட்டீர்களா? இல்லை, நாங்கள் ஏற்கனவே கிறிஸ்தவர்கள் தான், எங்களுடைய முன்னோர்கள் சபை போதகராகவும், உபதேசியாராகவும் இருந்தார்கள். அவர்கள் வழி வந்தவர்களாகிய நாங்கள் கிறிஸ்தவர்களாகவே இருக்கிறோம் என்று சொல்லி திருப்தியடைந்தவர்களாய் காணப்படுகிறீர்களா? பேதுரு, "......நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே

ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்......" (அப்.2:38) என்று யாரைப் பார்த்து பிரசங்கித்தான்? நசரேயனாகிய இயேசுவை அறிந்திருந்த யூதரைப் பார்த்தல்லவா! (அப்.2:22). அவர்களுக்கே மனந்திரும்ப வேண்டியது அவசியமாயிருந்ததென்றால் புறஜாதியாராகிய நமக்கு அது எவ்வளவு அவசியம்! எனவே "மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" ஏற்கனவே நான் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன் என்பீர்களானால் உங்களை நீங்களே வஞ்சித்துக் கொள்ளுகிறவர்களாயிருப்பீர்கள். தேவனுடைய சித்தத்தின்படி முதலாவது கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் நம்மை பாவமறகழுவ வல்லமை யுடையது என பாவத்திற்காக மனந்திரும்பி, பிறகு அப்பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்.இப்படிச் செய்யும் போது மட்டுமே நீங்கள் பாவத்திலே கெட்டுப் போகாமல் காக்கப்படுவீர்கள். பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுவீர்கள். பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டவர்களாயுமிருப்பீர்கள்.

அன்பு சகோதரிகளே, உலகில் ஒவ்வொரு நாளும் திடீர்திடீரென்று மாற்றங்கள் பல ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. கடந்த மாதத்தில் ஏற்பட்ட சுனாமி பேரழிவு உலகத்தையே உலுக்கி விட்டது. இந்த அழிவு இன்னும் நம்முடைய நினைவிலிருந்து நீங்காமல் உலுக்கிக் கொண்டிருக்கிறது. இதைப்போன்ற சம்பவம் நோவா காலத்தில் ஏற்பட்டது. "அப்போது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வர்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. ......இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் **நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!**" (2பேது3:6-11) என வேதம் கூறுகிறது. அன்று நோவா தேவ சத்தத்திற்குக் கீழ்ப்படிந்தான், நேவாவின் மனைவி நோவாவுக்குக் கீழ்ப்படிந்தாள், அவனுடைய பிள்ளைகளும், மருமக்களும் கீழ்ப்படிந்தனர் ஆனபடியினால் காக்கப்பட்டனர்.

இதோ "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (2பேது3:10). நாமோ பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும் என வேதம் கூறுகிறது நாம்மட்டுமல்ல நம்முடைய கணவன் நம்முடைய பிள்ளைகள் நம் குடும்பத்தார் அனைவரும் இவ்விதமாய் நடக்கவேண்டும். நோவாவும் அவன் குடும்பமும் காக்கப்பட்டது போல் நாமும் நம்முடைய குடும்பமும் காக்கப்பட வேண்டும். உலகத்திலுள்ள அனைவரும் காக்கப்பட வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அவபக்தியுள்ளவர்களை கண்டிக் கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார் (யூதா15). கர்த்தரை சந்திக்க ஆயத்தப்படுவோம்.

பாடம் - 11

# சபையின் கோட்பாடு
# CREED OF THE CHURCH

**J.C.Choate**

கோட்பாடு எனும் பதம், கிரிடோ என்னும் லத்தீன் வார்த்தையிலிருந்து வருகிறது. அது, "ஒரு விசுவாசம் அல்லது மார்க்க விசுவாசத்திற்கான ஆதார விதிமுறை; மார்க்க ரீதியான விசுவாச விதிமுறை அல்லது அறிக்கை; கொள்கைகளின் கூட்டுச் சுருக்கம் அல்லது தங்களின் கருத்தை வெளியிடுதல் அல்லது பின்பற்றுதல் என விளக்கப்படுகிறது ஒருவன் ஒரு கோட்பாட்டை நினைக்கும் பொழுதெல்லாம், அவர் வழக்கமாக, "அப்போஸ்தலர்களின் கோட்பாடுகளையும்" "நீசிய கோட்பாடு களையும்" நினைத்துப் பார்க்கிறான். மேலும், மனிதனால் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளில் தனது மனித கோட்பாடுகள் எல்லாம், கொள்கை புத்தகங்களாகவும், விதிமுறைகளாகவும் விசுவாச அறிக்கைகளாகவும் வெளியிடப்படுகின்றன. இவைகள் அனைத்தும் தேவனுடைய வசனத்துடன் கூட்டப்பட்டவை.

வேதாகமத்திற்கு மேல் ஒரு கொள்கைப் புத்தகம் தனது உபதேசத்தை தன்னகத்தே கொண்டிருக்குமானால் அது மிக அதிகம் என்று கூறலாமல்லவா? வேதாகமத்தைக் காட்டிலும், ஒரு கொள்கைப் புத்தகம் குறைவானதாகக் கொண்டிருக் குமானால், அது மிக குறைவு என்று சொல்லலாமல்லவா? எந்த ஒரு கொள்கைப் புத்தகமாவது வேதாகமத்தை மாத்திரம் தன்னகத்தே கொண்டிருக்கு மானால், பிறகு ஏற்கனவே உள்ள வேதாகமம் பிரயோஜனமற்றதாகும். வெளி.22:18,19; கலா.1:6-9 ஆகிய வசனங்கள் வசனத்தோடு ஒன்றை கூட்டவோ, குறைக்கவோ அத்துடன் ஏதாவது ஒரு (புத்தக) இணைப்பையோ கொடுக்கக் கூடாது என வலியுறுத்துகிறது. இன்னொரு வார்த்தையில் சொல்லப்போனால். வசனங்கள் முழுமை பெற்ற வைகள் (2தீமோ.3:16,17; யாக்.1:25). தேவனுடைய வார்த்தையின் படியே நாம் பேசவேண்டியவர்கள் (1பேது.4:11) எனவே வேறே கொள்கை புத்தகமோ, சட்டப் புத்தகங்களோ நமக்குத் தேவையில்லை.

தேவனுடைய வசனத்தையல்ல, மனிதனுடைய உபதேசங்களை பின்பற்றினதாலேயும் மனிதனுடைய கோட்பாடுகளை ஏற்றுக்கொண்ட

தினாலேயுமே இன்றைய மார்க்க உலகம் பிளவு பட்டுக் காணப்படுகிறது. ஒவ்வொரு சபையும் தனக்கென கொள்கை ரீதியான சட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும் என வாதிடுகின்றனர். வேதாகமம் புறக்கணிக்கப் படுவதற்கு இதுவே அடையாளமாகும். எவ்வளவு வேதனைக் குரியது. ஒவ்வொருவரும், மனிதனால் உருவாக்கப்பட்ட புத்தகங்களை விட்டு, தேவனுடைய வசனமாகிய வேதாகமத்திற்கே திரும்பவேண்டும் என்பதே நமது வேண்டுகோள். அது நம்மை பிரித்து வைக்காமல், கிறிஸ்து இயேசுவுக்குள் இணைக்கும்.

கர்த்தருடைய சபையின் கொள்கை என்ன? கிறிஸ்துவை யல்லாது வேறே இரட்சகர் இல்லை. வேதாகமேயன்றி வேறே கொள்கையுமில்லை. மார்க்க விஷயத்தில் நமது எண்ணங்களும், யோசனைகளும் பிரயோஜனமற்றவை வேதாகமத்திற்கு நமது "தனிப்பட்ட" வியாக்கியானம் தேவையில்லை. நமக்கு உள்ளதெல்லாம் வேதாகமம் மட்டுமே. அதற்கு நாம் கீழ்ப்படிந்திருக்கிறோம். பிறரையும் கீழ்ப்படியச் சுட்டிக்காட்டுகிறோம். எனவே அதைப் படிக்கவும் கற்கவும் ஒவ்வொருவரையும் வேண்டுகிறோம் (யோவா.5:39;2தீமோ.2:15). எங்குமுள்ள அனைத்து மக்களும் அதன் போதனைகளின்படிச் செய்ய கேட்டுக்கொள்கிறோம்.

நாம் பின்பற்ற ஏதுவான துணைப் புத்தகமோ புத்தகங்களோ நமக்கில்லை. வேதாகமத்திற்குச் சமமான சட்டங்களையோ ஒழுங்குகளையோ எழுதக்கூடிய அளவுக்கு உலகில் யாரும் இருப்பதாக நாம் நம்புவதில்லை. அப்படிப்பட்ட புத்தகத்தை எழுதும்படி கர்த்தர் யாருக்கும் உரிமை கொடுத்திருப்பதாகவும் நாம் நம்புவதில்லை. பரிசுத்த ஆவியானவரும் அப்படிப்பட்ட புத்தகத்தை எழுதும்படி ஏவியிருக்கக் கூடும் எனவும் நாம் நம்புவதில்லை.

தேவனுடைய வசனம் மட்டுமே, தேவனிடத்திலிருந்து வந்தது. தேவனால் ஏவப்பட்டது. அதுவே நம்மை இரட்சிக்கவும் முடியும். மேலும், கடைசி நாளிலே நம்மை நியாயந்தீர்ப்பதும் தேவனுடைய வசனமே (யோவா.12:48). இக்காரணங்களினாலும், வேறு அநேகக் காரணங்களினாலும், மார்க்க விஷயங்களில் வேத வசனங்களையே நமது வழிகாட்டியாக நாம் ஏற்றுக்கொள்கிறோம். மற்றவர்களையும் ஏற்றுக் கொள்ளும்படி ஊக்குவிக் கிறோம்.

சத்தியத்தை அறிய வேதாகமத்திற்கு செல்கிறோம். ஏனெனில் இதுவே

சத்தியமாகும் (யோவா.17:17; 8:32). சத்தியத்தின் ஊற்றுக்கண்ணுக்குச் செல்லாமல் சத்தியத்தைக் காண இயலாது, எனவே சத்தியத்தை விசுவாசிக்க வேண்டுமானால், நீங்கள் சத்தியத்தை கேட்க வேண்டும் (ரோம.10:17). மார்க்க விஷயங்களில் பெரும்பான்மையானோர் வஞ்சிக்கப் பட்டிருப்பதில் ஆச்சரியமில்லை. மார்க்க உலகில், ஏராளமான பிரிவினைகளும் குழப்பங்களும் ஏற்பட்டிருப்பதிலும் ஆச்சரியமில்லை. மனிதன் கர்த்தரிடம் செல்லுவதற்குப் பதில், மனிதனிடத்திலே (ஆலோசனை) உதவி கேட்டுச் செல்கிறான். மனிதனோ வேத எழுத்துக்களுக்கு பதிலாக மனிதனுடைய உபதேசங்களுக்குத் திரும்பிப் போகிறான். மனிதன் இரட்சிக்கப்பட வேண்டுமாயின், வேதாகமத்திற்கே திரும்ப வேண்டும்.

சபைக்கடுத்த காரியங்களை அறிய, மனிதன் வேதாகமத்திற்குத் செல்லும்படி உற்சாகப்படுத்துகிறோம். உலகிலே இன்று எத்தனையோ போலி சபைகள் உள்ளன. எது சரியானது? ஒருவன் ஒவ்வொரு சபையைக் குறித்தும் தனித்தனியாக ஆய்வு செய்யக்கூடுமா? இல்லை, சபையைக் குறித்து பேசுகிற சத்தியம் அடங்கிய் புத்தகத்திற்கே செல்ல வேண்டும். ஒருமுறை அவன் கர்த்தருடைய சபையைக் குறித்த சத்தியத்தைக் கற்றால், தொடர்ந்து வேதாகமப் போதனையை அடையாளப்படுத்துவதில் சிரமம் இராது.

ஒருவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய வேதாகமத்திற்குச் செல்லும்படி உற்சாகப்படுத்துகிறோம். மனித உபதேசத்தின்படி இரட்சிக்கப் பட அநேக வழிகள் உள்ளன. ஆனால் தேவனுடைய புத்தகத்தின் படி, ஒருவன் பின்பற்றும்போது, சத்தியத்தை கேட்க வேண்டும், அதை விசுவாசிக்க வேண்டும், பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும், பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும் என்கிற எளிதான போதனையைக் காண இயலும் (மாற்.16:15,16; அப்.2:38). மனிதன் சொல்லுவது எந்த வகையில் வித்தியாசமானது? கர்த்தரே இரட்சிக்கிறவர், எனவே ஒருவர் இரட்சிக்கப்பட சத்தியத்தைக் கேட்டு கீழ்ப்படிய வேண்டும்.

மனிதன் தேவனை எப்படித் தொழுது கொள்ளவேண்டும் என்பதை அறியவும் வேதாகமத்திற்கே செல்லும்படி உற்சாகப்படுத்துகிறோம். மனித உபதேசத்தின் படியான தொழுகை முறைக்கு அநேக முரண்பாடான வழிகள் இல்லை. வேதாகமம், கர்த்தர் சுட்டிக் காட்டிய ஒரே வழியாகிய

அவரது வார்த்தையையே போதிக்கிறது (யோவா.4:24).

இவைகள் மாத்திரமல்ல, இரட்சிப்பும், ஜீவனும் தேவபக்தியுமாகிய அனைத்து காரியங்களையும் குறித்து அறிய ஒவ்வொருவரும் வேதாகமத்திற்குச் சென்று அவைகளுக்குரிய சத்தியத்தை அறிய ஆலோசனை கூறுகிறோம். வேதாகமத்தை புரிந்து கொள்ள இயலாது. நிச்சயமாக உள்ளபடியே புரிந்துகொள்ள இயலாது என்ற கருத்தை மனிதன் கொண்டுள்ளான், இது உண்மையல்ல. மனிதன் தன்னைத்தான் இழந்துபோக ஏதுவாக, வேதத்திற்கு புறம்பே நிற்க வேண்டும் என்பதையே பிசாசு விரும்புகிறான்.

நமது கொள்கை என்ன? இயேசு கிறிஸ்துவும் அவரது வார்த்தையுமே. அவரேயன்றி வேறொருவருமில்லை. கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும், அவரது வார்த்தையே இறுதியானவை என்றும் நாம் விசுவாசிக்கிறோம். மனிதனின் கொள்கைகள் ஒரே இடத்திற்கு கொண்டு செல்லும் அதுதான் நரகம். இயேசு சொன்னார் "நானே வழியும் சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா.14:6).

## கேள்விகள்

தயவு செய்து சரியான விடைகள் தருக:

1. கோட்பாடு என்னும் பதத்தை விளக்கப்படுத்துக?---------------------------
   ------------------------------------------------------------------------------------------
2. ஒவ்வொரு (நாமகரணக் கூட்டத்திலும்) மனித சபைகளிலும் உள்ளவை யாவை?--------------------------------------------------------------
3. வசனத்துடன் ஒன்றைக் கூட்டவோ, குறைக்கவோ செய்பவர்களுக்கு என்ன சம்பவிக்கும்?------------------------------------------------------------
4. வசனங்கள் முழுமையானவைகளா?------------------------------------------
5. நிறைவு என்பது என்ன?----------------------------------------------------------
6. நாம் எப்படி பேச வேண்டும்?-----------------------------------------------
7. வேதாகமத்திற்கப்பால் இணைப்பு புத்தகங்கள் நமக்குத் தேவையா?---
   ------------------------------------------------------------------------------------------
8. இன்றைய மார்க்க உலகின் பிரிவினைகளுக்குக் காரணம் என்ன?-------
   ------------------------------------------------------------------------------------------

9. வேதாகமம் நம்மைப் பிரிக்குமா?------------------------------------------------

10. கர்த்தருடைய சபையின் கொள்கை என்ன?------------------------------------------------
------------------------------------------------------------------------------------------------

11. நமது சொந்தக் கருத்துகளும் யோசனைகளும் எதற்கும் பிரயோஜனமுள்ளவைகளா?------------------------------------------------

12. வேதவசனத்திற்கு நமது சுய வியாக்கியானம் அளிக்க நமக்கு உரிமை உண்டா?------------------------------------------------

13. வேதாகமத்திற்கு ஒப்பான ஒரு புத்தகத்தை எழுதக்கூடிய மனிதன் யாராகிலும் உலகில் உண்டா?------------------------------------------------

14. ஒருவர் ஒரு புத்தகத்தை எழுதவும், அது வேதாகமத்திற்கு ஒப்பானது என்று கூறவும் யாருக்காகிலும் கர்த்தர் அதிகாரம் கொடுத்துள்ளாரா?------------------------------------------------

15. தேவனுடைய வசனம் எங்கிருந்து வந்தவை?------------------------------------------------
------------------------------------------------------------------------------------------------

16. கடைசிநாளிலே நம்மை நியாயந்தீர்ப்பது எது?------------------------------------------------
------------------------------------------------------------------------------------------------

17. சத்தியம் என்பது என்ன?------------------------------------------------

18. மனிதன் உதவிக்காக யாரிடத்தில் செல்கிறான்?------------------------------------------------
------------------------------------------------------------------------------------------------

19. சபையைக் குறித்த சத்தியத்தை அறிய நாம் எங்கே செல்ல வேண்டும்?-
------------------------------------------------------------------------------------------------

20. இரட்சிக்கப்பட அநேக வழிகள் உள்ளனவா?------------------------------------------------

21. ஒருவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என வேதம் கூறுகிறது?------------------------------------------------

22. மனிதன் தொழுது கொள்ள என்ன செய்ய வேண்டுமென கர்த்தர் தமது வசனத்தில் வெளிப்படுத்தியுள்ளாரா?------------------------------------------------

23. வேதாகமத்தை புரிந்து கொள்ளக்கூடுமா?------------------------------------------------

24. எல்லோரும் வேதாகமத்தை ஒரே மாதிரியாக புரிந்து கொள்வது சாத்தியம்தானா?------------------------------------------------

25. பரலோகத்திற்குச் செல்ல ஒரே வழி யார்?------------------------------------------------

**-Selected**

"உமது பிரமாணங்களை விட்டு வழிவிலகுகிற யாவரையும் மிதித்துப்போடுகிறீர்; அவர்களுடைய உபாயம் வெறும் பொய்யே"

சங்கீதம் 119:118

## சந்திப்போம்! சிந்திப்போம்!

உரையாடல் - 30 D.எபிநேசர்

**யோனத்தான்:** *பாடலுக்கு அடுத்தபடியா ஜெபம் பண்றதுல சில சந்தேகங்கள் இருக்கு தாவீது. பாரம்பரியமான பல சபைகளில் பரமண்டல ஜெபம் தவறாம செய்யறாங்க. கிறிஸ்துவின் சபையில் அதைச் செய்யறதில்லையே! கேட்டா ஆண்டவர் சொன்னபடி கரெக்டா செய்யறது நம்மதான்றீங்க, ஆனா ஆண்டவர் கத்துக்குடுத்த பரமண்டல ஜெபத்தை செய்ய மாட்டேங்கறீங்களேப்பா!*

**தாவீது:** *நீ வாத்யார்ட்ட படிச்சியா, டீச்சர்ட்டப் படிச்சியா?*

**யோனத்தான்:** *வாத்யார்ட்ட தாப்பா படிச்சேன்*

**தாவீது:** *வாத்யார், டீச்சர் ரெண்டுமே ஒண்ணுதானேப்பா! இதுவே நமக்கு வெளங்க மாட்டேங்குது! சரி, உனக்கு ஸ்கூல்ல லீவ் லெட்டர் எழுதக்கத்துக் குடுத்தாங்களா?*

**யோனத்தான்:** *ஆமாப்பா, நல்லாக் கத்துக்குடுத்தாங்க. அது எதுக்கு இப்ப?*

**தாவீது:** *சொல்றேன், சொல்றேன். முந்தா நாள் ஆபிசுக்கு லீவ் போட்டியே, அப்ப ஸ்கூல்ல கத்துக்குடுத்ததை அப்படியே எழுதி ஆபீசுக்கும் கொடுத்தியா?*

**யோனத்தான்:** *அப்படியே எப்படியா குடுக்கறது? அது ஒரு* Model *தானே! அதை அடிப்படையாவச்சு இன்னைக்கு என்ன பிரச்சனையோ அதை எழுதிக் கொடுக்க வேண்டியதுதான்.*

**தாவீது:** *அதே மாதிரிதான்ப்பா ஆண்டவர் கத்துக்குடுத்த பரமண்டல ஜெபமும்! அது ஒரு* Model Prayer. *அதை அடிப்படையா வச்சு இன்றைய தேவைகளை நாம் பிதாகிட்டே கேட்கிறோம் (மத்6:9). ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது: பண்ணவேண்டிய விதம்.* Model *பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே: யாரை நோக்கி செய்ய வேண்டும்? உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக: மகிமையும் ஸ்தோத்திரமும் செலுத்துதல் உம்முடைய இராஜ்யம் வருவதாக: இராஜ்யம் வருவதற்கு முன்பு ஆண்டவர் இந்த ஜெபத்தைக் கற்றுக்கொடுத்ததினாலே இராஜ்யத்தின் வருகையை அங்கே குறிப்பிடுகிறார். அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில், இராஜ்யம் வந்தாகிவிட்டது (கி.பி.33 எருசலேமில்) இப்போது மறுபடியும் இராஜ்யம் வருவதாக என்று கேட்பது அபத்தமாக இருக்கிறது இல்லையா? எஞ்சிய பகுதியில் தேவனுடைய சித்தம் பூலோகத்திலே செய்யப்படவேண்டியதையும், நம்முடைய தேவைகளைக் கேட்கும்படியும் குறிப்பிடுகின்றார்.*

**யோனத்தான்:** *போதும், போதும். எனக்கு இப்ப நல்லா வெளங்கிருச்சு, இதைப் படிக்கிற மத்தவங்களுக்கும் புரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன். இப்ப ஜீட் வுட்டுக்கறேன். கர்த்தருக்குச் சித்தமானால்....*

**(மீண்டும் சந்திப்போம்)**

# வேதத்தைப் படிப்பது எப்படி?

## How to study the Bible

S.Yesiahan



எனக்கு அருமையான சகோதர, சகோதரிகளே, "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" (யோவா.5:39) என்று நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து சொன்னார். இன்றைக்கு எத்தனைபேர் இதை செய்கிறோம்? இன்றைக்கு வேதத்தை ஆராய்ச்சி செய்வது பாவம் என்று சிலர் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் நித்திய ஜீவன் வேண்டும் என்றால் வேதத்தை ஆராய்ந்து படித்தே ஆக வேண்டும்.

**ஏன் ஆராய்ந்து படிக்க வேண்டும்:**

ஏசாயா தீர்க்கதரிசி சொல்கிறார் "கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; ........ அவருடைய வாய் இதைச் சொல்லிற்று;"(ஏசா.34:16) என்றும் "வழிகளிலே நின்று பூர்வபாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்லவழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்றும் கர்த்தர் சொல்கிறார்" (ஏரே.6:16). புதிய ஏற்பாட்டில்...... "சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப்போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும் படி ஜாக்கிரதையாயிரு" (2தீமோ2:15) என்று பவுல் கூறுகிறார். ஆகவே அன்பானவர்களே, வேதத்தை நிதானமாய் பகுத்து ஆராய்ந்து படிக்க வேண்டியது நம்முடைய கடமை.

ஏனென்றால் "கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின் மேல்கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின் மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம்" (ஏசா.28:10) என்று ஏசாயா தீர்க்கதரிசி சொல்கிறார். ஆகவே நமக்கு கொடுக்கப்பட்ட பிரமாணம் அல்லது கற்பனை எது என்று அறிந்துகொள்ள வேண்டுமாயின், இயேசு சொன்னது போல் வேதத்தை ஆராய்ந்து படிக்க வேண்டும். "உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே.... பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள் (ரோம.6:17,18) என்று பவுல் கூறுகிறார். அந்த உபதேச சட்டம் எது என்று தெரியவேண்டுமாயின் வேதத்தை ஆராய்ந்து படித்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்த நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உபதேச சட்டத்திற்கு கீழ்ப்படிவோம்.

*"என்னைத்தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயம் தீர்க்கும் (யோவா.12:48) என்று இயேசு சொன்னார்.*

*இந்த செய்தியை வாசிக்கும் அன்பர்களே சற்று சிந்தித்துப் பாருங்கள். ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட பிரமாணம் வேறு, நோவாவுக்கு கொடுக்கப்பட்ட பிரமாணம் வேறு, மோசேயின் மூலம் இஸ்ரவேலருக்கு (யூதர்களுக்கு) கொடுக்கப்பட்ட பிரமாணம் வேறு ஆனால் கடைசி காலத்தில் உள்ள நமக்கு கொடுக்கப்பட்ட பிரமாணம் எது என்று என்றைக்காவது யோசித்ததுண்டா? மனசாட்சி என்று ஒன்று இருந்தால் அல்லது தேவனுடைய வார்த்தையை குறித்த பயம் என்று ஒன்று இருந்தால் நீங்கள் இன்றே வேதத்தை ஆராய்ச்சி செய்ய ஆரம்பியுங்கள். அப்படி ஆராய்ந்தால் வேதத்தில் அறிவு பெருகும் (தானி12:4) இயேசு சொன்னது போல் நித்திய ஜீவனும் கிடைக்கும்.*

*மனிதனுடைய கற்பனையையும் உங்கள் பாரம்பரியத்தையும் வேதத்தோடு கூட்டாதீர்கள் ...... உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்? (மத்.15:3) என்று இயேசு குற்றம் சாட்டுகிறார்.*

*ஆகவே தேவஜனமே எனக்கு அருமையானவர்களே, வேதம் தேவனுடைய வார்த்தை என்று நம்புவது உண்மையானால் பாரம்பரியத்தை விட்டு, மனிதனுடைய கோட்பாடுகளை விட்டு வேதத்தை படியுங்கள். வேதம் சொல்லுகிறபடி நடந்து நித்திய ஜீவனை தக்க வைத்துக்கொள்ளுங்கள்.*

*அன்பானவர்களே நம்முடைய உணவை நாம் உண்கிறோம். நம்முடைய உடைகளை நாம் உடுத்திக்கொள்கிறோம். நம்முடைய இருப்பிடத்தில் நாம் இருக்கிறோம். இப்படி இருக்க ஆத்மீக விஷயத்தில் மனிதனை சார்ந்து கொள்கிறோம். எந்த மனிதன் நல்லவன் என்று யோசித்துப் பாருங்கள். நாசியில் சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டு விடுங்கள் என்றும் (ஏசா.2:22; எரே.9:3,4) எந்த மனுஷனும் பொய்யன் என்றும் வேதம் கூறுகிறது.*

*பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே ..... (2நாளா.6:36) ஒருபாவமும் செய்யாமல் நன்மையே செய்யதக்க நீதிமான் பூமியிலில்லை (பிர.7:20) ........ எந்த மனுஷனும் பொய்யன் என்று சொல்லுவோமாக (ரோம.3:4) என்றும் வேதம் பல இடங்களில் மனிதர்களை குறித்து எச்சரிக்கிறது.*

*நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள், மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள் (1கொரி.7:23). வேதத்தை தெளிவாக படியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.*

# யாசோன்

## சிறுவர் பகுதி

*வேதபகுதி: அப்போஸ்தலர்கள்17:1-10*



இந்த யாசோன் யாரென்று உங்களுக்குத் தெரியுமா? தெசலோனிக்கே பட்டணத்தில் உள்ள ஒரு விசுவாசி. பவுலும் சீலாவும் தெசலோனிக்கே பட்டணத்திற்குச் சென்று அங்கே யூதருடைய ஜெப ஆலயத்தில் பவுல் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் சென்று, மூன்று ஓய்வு நாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை கொண்டு அவர்களுடனே பேசிவந்தான்.

அது என்னவென்றால் கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் திருஷ்டாந்தப்படுத்தினான். அதைக்கேட்ட யூதர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம் பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து பவுலையும் சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள். இதிலே விசுவாசியாத யூதர்கள் வைராக்கிங்கொண்டு வீணராகிய சில பொல்லாதவர்களைக் சேர்த்துக் கொண்டு கூட்டங்கூடி பட்டணத்தில் அமளியுண்டாக்கி, யாசோனுடைய வீட்டை வளைந்து கொண்டு, அவர்களைப் பட்டணத்தாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டுவர வகைதேடினார்கள். அவர்களைக் காணாமல், யாசோனையும் சில சகோதரரையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டுவந்து; உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள். இவர்களை யாசோன் ஏற்றுக்கொண்டான் இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி, இராயனுடைய கட்டளைக்கு விரோதமாகச் செய்கிறார்களென்று கூக்குரலிட்டு இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த ஜனங்களையும் பட்டணத்து அதிகாரிகளையும் கலங்கப்பண்ணினார்கள் என்று குற்றஞ்சாட்டினார்கள்.

பின்பு அவர்கள் யாசோனிடத்திலும் மற்றவர்களிடத்திலும் ஜாமீன் வாங்கிக்கொண்டு, அவர்களை விட்டுவிட்டார்கள். உடனே சகோதரர் இராத்திரிகாலத்திலே பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்துக்கு அனுப்பிவிட்டார்கள்.

யூதர்கள் மத்தியிலும், கிரேக்கர் மத்தியிலும், தெசலோனிக்கே பட்டணத்திலே சுவிசேஷம் அறிவிக்க உதவியாக இருந்த யாசோனைப் பற்றி கேள்விப்பட்டீர்கள் அதைப்போல நீங்களும் வருங்காலத்தில் சுவிசேஷம் அறிவிக்க உதவியாக இருப்பீர்களா?

**மனப்பாட வசனம்:**
"சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்"
(அப்.8:4)

## வேத அறிவுப்போட்டி எண் 53 -ல் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| P. அலிஸ்மேரியம்மாள் | -வத்தலக்குண்டு | G.கிரேஸ்ஜெயா | -வெள்ளகுளம் |
| V.தண்டபானி | -சிலுவத்தூர் | S.ஜெயராணி | -கோவை |
| S.ஆனந்தராஜ் | -ஈரோடு | A.ஆனந்த் | -மதுரை |
| S.எஸ்தர்மேரி | -வத்தலக்குண்டு | G.P.ஏசையன் ராஜ் | -கோபி |
| A.சேவியர்மேரி | -மதுரை | S.எபிநேசர்ஜெபமணி | -திருக்கண்டலம் |
| V.கோவலன் | -மதுரை | S.லெட்சுமிதேவி | -சென்னை |
| P.S.லலிதாபிரேமகுமாரி | -மதுரை | D.ஏசுதாஸ் | -சித்தூர்(A.P) |
| J.S.நிர்மலாஜான் | -மதுரை | R.சுவாதிரவி | -ஈரோடு |
| E.சுகந்திபாய் | -ஈரோடு | | |

## வேத அறிவுப்போட்டி எண் 53 -ன் விடைகள்

1. பரலோகத்தில் -பிலி.3:20
2. பஸ்கா -எரே.20:1,2
3. யாக்கோபு பார்வோனிடம் -ஆதி.47:9
4. முதலாம் உடன் படிக்கை -எபி.9:10
5. செபுலோனும், இசக்காரும் -உபா.33:19
6. யோசுவா -யோசு.23:10
7. பைத்தியமான வைகளைத் -1கொரி.1:27
8. கிதியோன் -நியா.6:37-40
9. பரிசுத்தமாயிருக்கும்-ரோம.11:16
10. என் கற்பனைகளை-யோவா.14:15

## பொது அறிவுச் சோதனை

1. முதன் முதலில் கட்சி முறை தோன்றிய நாடு எது?
   அ)இங்கிலாந்து ஆ)பிரான்ஸ் இ)ஜெர்மனி
2. துப்பாக்கியை தன் நாட்டு கொடியில் சின்னமாக வைத்திருக்கும் நாடு எது?
   அ)இஸ்ரேல் ஆ)ஈராக் இ)மொஸாம்பி
3. கம்பளி ஆடை உற்பத்திக்கு பெயர் பெற்ற இடம் எது?
   அ)தாரிவால் ஆ)அஸ்ஸாம் இ)சூரத்
4. ஆப்பிரிக்காவின் மிக உயர்ந்த எரிமலை சிகரம் எது?
   அ)கிளி மாஞ்சோரோ ஆ)கெய்ரோ இ)நைரோபி
5. இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்காக விளையாடிய கிரிக்கெட் ஆட்டக்காரர் யார்?
   அ)சுனில் கவாஸ்கர் ஆ)கபில்தேவ் இ)பட்டோடிநவாப்

விடைகள்: 1. இங்கிலாந்து 2. மொஸாம்பி 3. தாரிவால் 4. கிளிமாஞ்சோரோ 5. பட்டோடி நவாப்

'ஒரேவழி' தபால் வழி பாடத்தை உங்கள் திருச்சபையில் அறிமுகம் செய்ய விரும்புகிறோம். விருப்பமுள்ள சபை ஊழியர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளவும். இயேசு ஒருவரையும் புறம்பே தள்ளவில்லை அதே போல் நாங்களும் ஒருவரையும் புறம்பே தள்ளுவதில்லை.

# தேவன் மனுஷியை ஏன் உண்டாக்கினார்?
# Why Did God Make Women?

**-Nancy Wheat**



தேவன் மனுஷியை ஏன் உண்டாக்கினார்? தேவன் எந்த உயிரினங்களையும் நோக்கமில்லாமல் அல்லது காரணமில்லாமல் உண்டாக்கினாரா? நிச்சயமாய் இல்லை! நாம்முடைய தேவன் ஒரு மாபெரும் சிருஷ்டிகர்; அவர் ஒவ்வொரு சிருஷ்டியையும் ஒரு அற்புதமான நோக்கத்துடன் சிருஷ்டித்திருக்கிறார். ஆகவே, மிக அதிகமாய், மனுஷியானவள் அற்புதமான தெய்வீக நோக்கத்துடன் உருவாக்கப்பட்டாள் இது மனுஷியின் நோக்கம் யாதென நான் நினைப்பது முக்கியமல்ல. இது எந்தவொரு மனிதனுடைய யோசனை என்னவென்பதும் முக்கியமல்ல. நாம் நிறைவு செய்ய வேண்டிய நோக்கம் தேவனுடைய நோக்கம் என்பதே முக்கியம்.

ஆதியாகமம் இந்த ஆச்சரியமான உலகத்தினை தேவன் சிருஷ்டித்த சம்பவத்தைப் பற்றி கூறுகிறது. ஒவ்வொரு தாவரமும், பறக்கும் பறவையும் மிருகமும் இந்த அற்புதமான சிருஷ்டிப்பில் ஒரு நோக்கத்தைக் கொண்டிருந்தது. மனுஷனுடைய நோக்கம் ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்துவதும் காப்பதுமாகும் (ஆதி.2:15). இது காண்பதற்கு ஒரு குடியானவனுடைய வாழ்க்கையை சித்தரிக்கும் செயலாயிருந்தது, ஆனால் தேவனாகிய கர்த்தர், "...... மனுஷன் தனிமையாயிருப்பது நல்ல தல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (ஆதி.2:18). பிறகு தேவனாகிய கர்த்தர் இன்னொரு அற்புதத்தை நிகழ்த்தினார்: அவர் ஆதாமுடைய "ஏற்றதுணை" -ஆக மனுஷியை உண்டாக்கினார். தேவனாகிய கர்த்தர் மனுஷியை உண்டாக்கும் வரை மனுஷன் முழுமைபெறவில்லை, சிருஷ்டிப்பு முழுமைபெறவில்லை. அங்கே சிருஷ்டிப்பில் ஒன்றும் மனுஷியைப் போலில்லை. மனுஷியுடைய நோக்கத்தினை வேறு எந்த சிருஷ்டியும் நிறைவு செய்யமுடியாது. "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்;

இவள் மனுஷனில் எடுக்கப்பட்ட படியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்" என ஆதியாகமம்2:23,24 கூறுகிறது. இந்தப் பகுதி தொடர்ந்து, "இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" எனக் கூறுகிறது. மனுஷியின் நோக்கம் மனுஷனுடைய துணையாக இருப்பதே ஆகும். சமுதாயத்தின் மிக அடிப்படை அமைப்பான குடும்பங்களை உருவாக்கவே மனுஷனையும் மனுஷியையும் தேவனாகிய கர்த்தர் சிருஷ்டித்தார். குடும்பம் அமைதியாக செயல்படுவதில் நாம் ஒருவருக்கொருவர் உதவுகிறவர்களாயிருக்க வேண்டும். எப்படியாகிலும் மனுஷனாகவும் மனுஷியாகவும் நம்முடைய கடமைகள் வித்தியாசமானவை. இயேசு தம்முடைய கிரியையை நிறைவேற்றும் படிக்குப் பூமிக்கு வந்திருக்கையில் தேவன் பரலோகத்தில் வீற்றிருப்பது போல, ஒவ்வொருவரும் வேறுபட்ட கடமையினைக் கொண்டிருக்கிறனர், ஆகவே மனுஷனும் மனுஷியும் குடும்பத்தில் வித்தியாசமான கடமைகளைக் கொண்டுள்ளனர்.

மிருகங்கள் தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளை இயற்கை சுபாவத்தின் மூலம் நிறைவேற்றுகின்றன. கற்றுக்கொள்ளக் கூடியவைகளாயிருந்தாலும் அவைகள் நாம் செய்கின்றவைகளே. எபே.5:21-23, மற்றும் 1பேது.3:1-9 போன்றவை மனைவிகள் தங்களுடைய புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருக்கும்படி கூறுகிறது. கீழ்ப்படிந்திருத்தல் என்பது "அன்புடனே புருஷனுக்குக் கீழ்ப்படிந்திருத்தல்" அல்லது "புருஷனுடைய முடிவெடுத்தலில் உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தல்" என்பதாகும். பெண்களே, பிலிப்பியர்2:5-8ஐ வாசித்து பிறகு இயேசுவில் நீங்கள் கீழ்ப்படிந்து இருக்கிறீர்களா எனத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். கீழ்ப்படிதல் அடிமையாயிருப்பது அல்லது கொடுமையாக நடத்தப்படுவது என பொருள்படாது. இயேசு தம்முடைய பிதாவின் சித்தத்திற்கு அன்புடனே கூடிய கீழ்ப்படிதலோடு ஒப்படைத்தார்.

நாம் நம்மை நம்முடைய புருஷரின் ஆளுகைக்கு ஒப்படைக்கக் கடவோம். ஆம், அநேக புருஷர்கள் கிறிஸ்து சபையில் அன்புகூருகிறது போல தங்களுடைய மனைவிகளிடத்தில் அன்புகூரும் தங்களுடைய கடமையினை நிறைவேற்றுகிறதில்லை, ஆனால் இது நம்முடைய கடமையினின்று நம்மை விடுவிக்கிறதில்லை. இப்படிப்பட்ட புருஷரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு 1பேதுரு 3, "..... பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்" எனக்கூறுகிறது. "........ பாலிய ஸ்திரீகள் தங்கள்

புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்தபுத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர் களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர் களுமாயிருக்கவும் ..."தீத்து2:3-5 ஸ்திரீகளுக்குக் கூறுகிறது. ஏன்? "அப்போது தான் தேவவசனத்தை ஒருவரும் தூஷிக்கமாட்டார்கள்" கிறிஸ்தவர் களாகிய நாம் தேவனுடைய வசனம் தூஷிக்கப்பட ஒருபோதும் இடமளிக்காமலிருக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். நம்முடைய ஜீவியம் இந்த விருப்பத்தைப் பற்றிக்கொள்ளுகிறதா? தேவன் நம்முடைய குடும்பங்களுக்கென்று கொடுத்த மாதிரியின்படி நாம் ஒருவருக்கொருவர் வாழ்வில் உதவும்படிக்கு புருஷர், மனைவிகளுமாக நாம் சேர்ந்து ஜெபிக்கக்கடவோம்.

புருஷர்களே, மனைவியானவள் பலவீனப்பாண்டமாயிருக்கிறபடியினால், நீங்கள் உங்கள் மனைவிகளை அன்புடன் நடத்துவீர்களானால், அவர்கள் உங்களுடைய ஆளுகைக்கு எளிதாகக் கீழ்ப்படிந்திருப்பார்கள்.

மனைவிகளே, நீங்கள் சாராள் ஆபிரகாமுக்குக் கீழ்ப்படிந்தது போல நீங்கள் பயபக்தியோடு, அன்புகூர்ந்து உங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்தால், அவர்கள் உங்களிடத்தில் விவேகத்துடன் நடந்து கொள்வது அவர்களுக்கு எளிதாய்க் காணப்படும்.

சிந்தியுங்கள், நம்முடைய ஜீவியத்தை மேற்கொள்ளும் சாத்தானுடைய வல்லமையோடு போரிடும்படிக்கு நாம் ஒருவருக்கொருவர் உதவிசெய்கின்றவர்களாயிருக்கிறோம். நாம் ஒருவருக்கொருவர் சண்டையிடுகிறவர்களாக மற்றவரை குற்றப்படுத்தி நம்முடையதை நியாயப்படுத்திக் கொள்ளும்போது, சாத்தான் வெற்றி கொள்ளுகிறான். சாத்தான் உங்களுடைய குடும்பத்தைக் கட்டுப்படுத்த இடமளிக்காதிருங்கள்.

**ஜெபியுங்கள்**

- ☐ தூத்துக்குடி கூட்டங்களை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக....
- ☐ சென்னையில் மூன்று இடங்களில் நடைபெற்ற கூட்டங்களுக்காக....
- ☐ வத்தலக்குண்டு வேதாகமக் கல்லூரிக்காக....

## பேசும் வேதாகமம் : 3

1. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது யாருடைய ஈவு? - தேவனுடைய - (எபே.2:8).
2. ஒருவரையொருவர் தங்களிலும் எப்படிப்பட்டவர்களாக எண்ண வேண்டும்? - மேன்மையாக - (பிலி.2:3).
3. அநியாயஞ் செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான் எது இல்லை? - பட்சபாதம் -(கொலோ3:25).
4. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே யாருடைய சித்தமாயிருக்கிறது - தேவனுடைய - (1தெச.4:3)
5. நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் பாடு அனுபவிக்கிறவர்களாயிருக்க, அந்த ராஜ்யத்திற்கு நீங்கள் பாத்திரரென்றெண்ணப்படும்படிக்கு, தேவன் நியாயமான தீர்ப்புச்செய்கிறவரென்பதற்கு, எது அத்தாட்சியாயிருக்கிறது? - அதுவே - (2தெச.1:5).
6. உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும், ஸ்திரீகளுக்கு உத்தரவு உண்டா? - இல்லை - அவள் அமைதலாயிருக்கவேண்டும் - (1தீமோ.2:12).
7. வேதவாக்கியங்களெல்லாம் எதனாலே அருளப்பட்டிருக்கிறது? - தேவ ஆவியினால் - (2தீமோ.3:16).
8. நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் எப்படி இரட்சித்தார்? - தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் - (தீத்.3:5).
9. தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் எப்பொழுது? - இனிவருகிறதாயிருக்கிறது - (எபி.4:9).
10. கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளை துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் என்னவாக வைத்துக்கொள்ள வேண்டும்? - திருஷ்டாந்தமாக - (யாக்.5:10).

## ஆசை

1. ஆமானுக்கு யூதர்களை அழிக்க ஆசை - எஸ்.3:8,9
2. யோபுவின் மனைவிக்கு தேவனைத் தூஷிக்க ஆசை - யோபு2:9
3. யோனாவுக்கு தர்ஷிசுக்குச் செல்ல ஆசை - மத்.2:13
4. ஏரோதுக்கு இயேசுவைக் கொல்ல ஆசை - மத்.2:13
5. ஏரோதியாளுக்கு யோவான் ஸ்நானகனின் தலையின் மீது ஆசை - மத்.14:8
6. யூதாஸ்காரியோத்துக்கு 30 வெள்ளிக்காசின் மீது ஆசை - மத்.26:14,15
7. பேதுருவுக்கு மறுபடியும் மீன் பிடிக்க ஆசை - யோவா.21:3
8. அனனியா சப்பீராளுக்கு காணியாச்சியை வஞ்சிக்க ஆசை - அப்.5:1,2
9. யூதர்களுக்கு இயேசுவை சிலுவையில் அறைய ஆசை - மத்.27:22
10. சவுலுக்கு கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த ஆசை - அப்.9:1,2

ஆனால் பிசாசுகள் நீங்கின மனுஷனுக்கோ இயேசுவோடு இருக்க ஆசை - லூக்.8:38

P.அலிஸ்மேரி

## வேத அறிவுப் போட்டி எண்.54

*போட்டியாளர்கள் கவனத்திற்கு,*

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும்.*

1. பொய்யாணையிடுகிற வார்த்தைகளைச் சொல்லி,உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்; ஆகையால் வயல் வெளியின் படைச்சால்களில் விஷப்பூண்டுகளைப் போல எது முளைக்கும்?
2. கர்த்தர் யாருக்கு அறிவைப்போதிப்பார்? யாருக்கு உபதேசத்தை உணர்த்துவார்?
3. பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
4. பணஆசை எல்லாத் தீமைக்கும் எண்ணவாயிருக்கிறது?
5. அவர் தமது வல்லமையினால் சமுத்திரக் கொந்தளிப்பை அமரப்பண்ணி, தமது ஞானத்தினால் அதின் மூர்க்கத்தை என்ன செய்கிறார்?
6. யார் குணசாலியும், கூடாரவாசியுமாய் இருந்தான்?
7. பலிபீடத்தின்மேல் அக்கினி எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கவேண்டும்; அது ஒரு பொழுதும் எண்ணலாகாது?
8. தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதேயென்று யாருக்கு சொல்லப்பட்டது?
9. கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன் என்றவன் யார்?
10. எருசலேமுக்குப் புறம்பே ஒரு தீர்க்கதரிசியும் மடிந்து போகிறதில்லையென்று நான் சொன்னதாக அந்த நரிக்குச் சொல்லுங்கள் என்றவர் யார்?

### நடப்புச் செய்திகள்

- **அந்தமானில் தொடர்ச்சியான நிலஅதிர்வு, ஏப்ரல் வரை நீடிக்குமென சென்னை பல்கலைக்கழகம் தகவல்.**
- **சென்னையில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் தனியாருக்கு டெண்டர் விட முடிவு.**
- **125 கோடி செலவில் சுனாமி எச்சரிக்கை திட்டம் 2 1/2 ஆண்டுகளில் நிறைவேற்ற மத்திய அரசு முடிவு.**
- **பக்ரீத் பண்டிகையையொட்டி மொராக்கோ மன்னர் முகமது சிறைக் கைதிகளில் 514 பேருக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார்.**
- **ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் தொடரில் முதன் முறையாக சாம்பியன் பட்டம் வென்றவர் ரஷ்யாவின் மாரட் சபின்ஆவார்.**

Owned and published by B.Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: **B.Arjunan.**


Registered with Registrar of Newspapers for India under No.TNTAM/2000/3629
Postal Registration. No. TN/SR-164/2003-2005 Lincensed to Post without prepayment
License No.TN/WPP-25/SR/2003-2005 Posted at Batlagundu Post Office on 10th Feb. 2005.



**எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க**
**அன்புடன் அழைக்கிறோம்.**

## கிறிஸ்துவின் சபை

**7.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202**
**திண்டுக்கல் மாவட்டம்.**
**போன்: 04543-263278 செல்: 9443558041**
E-mail:thewordofchrist@sancharnet.in
arjunglory@yahoo.co.in



“சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்” (யோவான் 8:32)

'ஒரே வழி' தபால்வழி வேதபாடதிட்டம்
**The Master Course**
தமிழில்
இருபது வயதிற்கு மேற்பட்டவர்கள்
இன்றே ரூ.30/- செலுத்தி
திட்டத்தில் சேர்ந்து ஒரு வருடத்தில் முடித்து
Certificate பெற்றுக்கொள்ளுங்கள்
**THE ONE WAY**
**BATLAGUNDU BIBLE COLLEGE**
P.O. Box 5. BATLAGUNDU - 624 202
S.INDIA



**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் ஆண்டு சந்தா
இந்தியா -ரூ.50/-
வெளிநாடு - ரூ.500/-
தனிப் பிரதி - ரூ.5/-

**Monthly Magazine**

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box 5
Batlagundu - 624 202
S. India